2007/FM/40 (37)

# யௌவனப் பருவத்தில்



- உலக சுகாதார நிறுவனத்தின் வரைவிலக்கணப்படி யௌவனப் பருவம் என்பது 10-19 வயதிற்கு இடைப்பட்ட காலமாகும்.
- இது பிள்ளைப்பருவத்தில் இருந்து இளைஞர் யுவதிகளாக மாறுவதற்கு இடைப்பட்ட மிக முக்கிய காலமாகும்.
- இளமைப் பருவத்தில் நுழையும் போது உடலியல் உளவியல் மற்றும் சமூகவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன.
- இந்த பருவத்தில் ஏற்படும் சவால்களுக்கு சரியான முறையில் முகம் கொடுக்காவிடில் அது பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தும்.

சமுதாய மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

அனுசரணையாளர்கள் :
**Sugantha Nursing Home.** Anaipanthy. 395-A, Navalar Road, Jaffna.
**LAVA DIAGNOSIS**
Member of lava Holidings Pvt Ltd.
75, Temple Road, Jaffna.

# கட்டிளமைப் பருவக் கர்ப்பங்கள் ஆபத்தானவை



## கட்டிளமைப் பருவக் கர்ப்பத்தின் முக்கியத்துவம் என்ன?

- 20 வயதுக்கு முன்னர் எதிர்பார்த்தோ/ எதிர்பாராமலோ ஏற்படும் கர்ப்பம் இளவயதுக் கர்ப்பமாகும்.
- 20 வயதுக்கு குறைந்த பெண் உடல், உள ரீதியில் தாயா வதற்கு முழுமையான விருத்தியை அடையாததால் ஆபத்து நிறைந்ததாதம்.

## கட்டிளமைப் பருவக் கர்ப்பத்திற்கான காரணங்கள்

- இளவயதுத் திருமணங்கள்.
- திருமணத்திற்கு முந்திய பாலியல் தொடர்புகள்.
- இளவயதுக் காதல்களும், முறை தவறிய உறவுகளும்.
- நெருக்கமான வாழ்விடங்கள்/சக வயதினரின் நெருக்கீடுகள்.
- கர்ப்பம் ஏற்படுவது தொடர்பான அறிவின்மை.
- கர்ப்பத்தடை முறைகள் தொடர்பான அறிவின்மை.
- பாலியல் துஷ்பிரயோகங்கள்.

## இளவயதுக் கர்ப்பத்தால் ஏற்படும் பாதிப்புகள்

- **தாயில் ஏற்படும் ஆபத்து நிலைமைகள்**

### 1.மருத்துவ ரீதியிலான பிரச்சினைகள்

- கர்ப்பப்பை கர்ப்பத்தைத் தாங்கும் வகையில் பூரண வளர்ச்சி யடையாமையால் அதிகரித்த கர்ப்பகாலச் சிக்கல்கள்.
- அதிகரித்த அளவில் கர்ப்பகால குருதிச்சோகை, கர்ப்பகால உயர் குருதியமுக்கம், கர்ப்பகால நீரிழிவு நோய் ஏற்படல்
- தாய் மரணம் பிரசவத்தின் போது இரண்டு மடங்காக அதிகரிக்கலாம்.



MAY 2011


- பாதுகாப்பற்ற கருச்சிதைவால் (சுயமான அல்லது தூண்டப்பட்ட) ஏற்படும் ஆபத்துகள்.
- குறைமாதப் பிரசவங்களும் அதன் விளைவான சிக்கல்களும்.
- ஒடுக்கமான பூப்பென்பு என்பதால் நீண்ட நேர பிரசவ வேதனையும், பிரசவம் தடைப்படுதலும்.
- பிள்ளைப் பேற்றின் பின்னான தாக்கங்கள்.
- பாலியல் நோய்கள் மற்றும் பிற நோய்களின் தாக்கம் அதிகரித்தல்

**2.சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்**

- கல்வி பாதிப்படைதல்
- உளரீதியாகப் பாதிப்படைதல்
- ஆரோக்கியமான கரு வளர்வதில் அக்கறையின்மை
- பிள்ளை வளர்ப்புக்குரிய முதிர்ச்சியற்ற தன்மை.
- திருமண வாழ்க்கையில் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல்

## • குழந்தையில் ஏற்படும் ஆபத்து நிலைகள்

**1.மருத்துவ ரீதியிலான பிரச்சினைகள்**



- பிறப்பு நிறைக்குறைவு.
- பிறவிக் குறைபாடுகள், அங்கவீனங்கள்.
- சிசு மரணம்.
- பாலியல் நோய்களின் தாக்கம் அதிகரித்தல்
- நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த குழந்தைகள்.
- விவேகம் குறைந்த குழந்தைகள்.
- குழந்தை வளர்ந்து பெரியவரானதும் உயர் குருதியமுக்கம், நீரிழிவு, இருதய நோய்கள், உடல் நிறையதிகரிப்புக்கு ஆளாதல்.

**2. குழந்தைகள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சனைகள்**

- இளம் வயதில் கர்ப்பம் அதிகரித்தல்
- சிறந்த வழிகாட்டலின்மை

## • பெண் திருமணமாகாதவராயின் ...

- பெற்றோர் நண்பர்களால் ஒதுக்கப்படல்
- சமூக அவமானத்திற்கு உள்ளாதல்
- கலங்கிய நிலையும், தனது நிலையை உறுதி செய்ய முடியாத நிலையும்.
- எதிர்காலக் கனவுகள் சிதைக்கப்படல்.
- பாதுகாப்பற்ற கருச்சிதைவு - இதனால் மலட்டுத் தன்மை, இறப்பு, உளத்தாக்கம், சமூக எதிர் விளைவுகள்.
- மனவடு, தற்கொலை.

- குழந்தையின் பிறப்பை உரிய முறையில் பதிய முடியாமை.
- குழந்தை சமுதாயத்தால் பழிக்கப்பட்டு ஒதுக்கப்படலாம் பிள்ளைக்கு அங்கீகாரமின்மை
- குழந்தை குரோத மனப்பான்மையுடைய வன்முறைப் போக்குள்ள குழந்தையாக மாறலாம்.

## • தவிர்க்கும் முறைகள்

- கல்வி, பொழுதுபோக்குகளில் கூடிய கவனம் செலுத்துதல்
- தாய்மையடைதலையும் அதனால் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல்
- இளமைப் பருவ உடல் உள மாற்றங்களை விளங்கிக் கொள்ளுதல்
- பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்தல்
- முறை தவறிய உறவுகளை தவிர்த்தல், அல்லது சந்தர்ப்பத்தை வழங்காமல் இருத்தல்
- சமூக கலாச்சாரங்களை மதித்துப் பின்பற்றுதல்
- இளம் பருவத்தில் திருமணம் செய்வதைத் தவிர்த்தல்

# பாதுகாப்பற்ற, சட்டவிரோதமான கருச்சிதைவும் அதன் விளைவுகளும்

- சட்டவிரோதமாக கருச்சிதைவு தூண்டப்பட ஏதுவாகும் சந்தர்ப்பங்கள்



- திருமணத்திற்கு முன் கருத்தரித்தல்
- பாலியல் வல்லுறவு
- தகாப்புணர்ச்சி ,முறைகேடான பாலுறவு.
- திருமணமானவர்களில் திட்டமிடப்படாத கருத்தரிப்பு
- கருத்தரித்தலின் பின் பட்டப்படிப்புகள், வெளிநாட்டு வாய்ப்புகள் கிட்டுதல்.

- சட்டவிரோதமாக தூண்டப்பட்ட கருச்சிதைவினால் ஏற்படும் ஆபத்துக்கள்

- அதிகளவு குருதி வெளியேறுவதால் மரணம் ஏற்படலாம்.
- பாவிக்கப்படும் தொற்று நீக்காத உபகரணங்களால் கிருமித்தொற்று, ஏற்பு வலி என்பன ஏற்பட்டு மரணம் சம்பவிக்க லாம்.
- தொற்றுகளால் கருப்பை பலோப்பியன் குழாய் பாதிக்கப்பட்டு பின்னர் கர்ப்பமடைய முடியாத நிலை ஏற்படலாம்.
- குருதியினுள் கிருமித் தொற்றுகை, மூளை மென்சவ்வு அழற்சி, நுரையீரல் அழற்சி ஏற்படலாம்.
- கருவானது தொடர்ந்து வளர்ந்து குறைபாடுடைய பிள்ளையை பிரசவிக்க வேண்டிய நிலையை தோற்றுவிக்கலாம்.
- கருப்பைவாய் அழுத்தம் குறைவதால் எதிர்காலத்தில் தொடர்ச்சியான கருச்சிதைவு ஏற்படலாம்.
- மனவேதனை, குற்றவுணர்வு என்பன ஏற்பட்டு நீண்டகால மனநோயாளியாகக்கூட மாறலாம்.

## பாலியல் தொடர்பு மூலம் பரவும் நோய்களும் தடுப்பு முறைகளும்




### • பாலியல் தொடர்பு மூலம் பரவும் நோய்கள் என்றால் என்ன?

❖ பாதுகாப்பற்ற பாலியல் நடத்தைகளின்போது நோய்த்தொற்றுள்ள ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவும் நோய்களே பாலியல் தொடர்புகள் மூலம் கடத்தப்படும் நோய்களாகும். இவ்வாறான தொடர்பிலிருக்கும் எவருக்கும் தனிநபர் வேறுபாடின்றி தொற்றஇடமுண்டு.

### • இந்நோய்களுக்கு ஆளாகத்தக்கவர்கள் யார்?

❖ ஒன்றுக்கு மேற்பட்டோருடன் பாலியல் உறவு கொள்பவர்கள்
❖ விபசாரத் தொழிலில் ஈடுபடுபவர்கள்
❖ விபசாரத் தொழிலில் ஈடுபடுவோருடன் பாலியல் உறவு கொள்பவர்கள்
❖ தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள்
❖ பாலியல் மூலம் கடத்தப்படும் நோயுள்ளவருடன் பாலியல் தொடர்பு கொள்ளும் எவரும்.

### • கடத்தப்படும் நோய்கள் எவை?



❖ சிபிலிசு (Syphilis)
❖ கோணோரியா (Gonorrhoea)
❖ பாலுறுப்பு கேப்பீஸ் (Genital herpes)
❖ பாலுறுப்பு உண்ணிகள் (Genital warts)
❖ கோணோரியா அல்லாத சிறுநீர்வழி அழற்சி (Non gonococcal urethiritis)
❖ எயிட்ஸ் (AIDS)
❖ பங்கசினால் ஏற்படும் பாலுறுப்பு நோய் (Candidiasis)
❖ ஈரலழற்சி B (Hepatitis B)

## இவை எவ்வாறு கடத்தப்படுகின்றன?



- தொற்றடைந்த ஒருவருடன் (அறிகுறிகள் வெளிப்படுபவர்/ வெளிப்படாதவர்) பாதுகாப்பற்ற வகையில் யோனிமடல்வழி,குதவழி, வாய்வழி மூலமான பாலியலுறவு
- தொற்றடைந்த ஒருவரின் குருதியுடனான தொடர்பு (குருதிப் பாய்ச்சல், ஊசி, சத்திரசிகிச்சை உபகரணங்கள் கிருமியழிக்காமை)
- சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுதல்
- கர்ப்பகாலத்தில் தொற்றடைந்த தாயிலிருந்து குழந்தைக்கு சூல்வித்தகமூடாக/ பிறப்பின்போது/ தாய்ப்பால் மூலம் தொற்றடைதல்

## இந்நோய்களின் பொதுவான சில அறிகுறிகள்

- பாலுறுப்புப் பிரதேசத்தில் சீழ்க்கொப்பளங்கள் ,புண்கள் தடிப்புக்கள் தோன்றுதல்
- யோனிமடலினூடாக /ஆண்குறியினூடாக சீழ் வெளியேறுதல்
- சிறுநீர் கழிக்கும்போது வலியோ நோவோ ஏற்படல்
- பாலுறுப்புப் பிரதேசத்தில் அசாதாரணமாக அரிப்பு ஏற்படல்
- உடலுறவின்போது வேதனை ஏற்படல்
- பாலுறுப்புப் பிரதேசத்தில் உண்ணிகள் வளர்தல்
- அடிவயிற்றில் நோ, விதைப்பைகளில் வீக்கமும் நோவும் ஏற்படல்

## பாலியல் நோய்களைத் தடுக்கும் வழிமுறைகள்

- நோய்த்தொற்று உள்ளவருடன் பாலுறவைத் தவிர்த்தல்
- நம்பிக்கையான ஒருவருடன் மட்டும் பாலியல் தொடர்பு கொள்ளல். ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் துணைவர்/ துணைவியைத் தவிர்த்தல்
- ஆபத்தானவை என சந்தேகிக்கும் பட்சத்தில் உடலுறவின் போது ஆணுறைகளைப் (condoms) பயன்படுத்தல்
- பிரசவத்திற்கு அண்மையில் தொற்று ஏற்படின் சிசேரியன் முறை மூலம் பிரசவித்தல்

- நோய்த்தொற்றுடைய தாய்மார் குழந்தைகளை கையாள்வதைக் குறைத்தல்
- சவரம் செய்யும் இடங்களில் பிறர் பாவித்த சவர அலகுகளையோ, தொற்று நீக்காத ஊசிகளையோ உபயோகிப்பதைத் தடுத்தல்

## பாலியல் தொற்றுநோய்கள் மூலம் ஏற்படக்கூடிய பின்விளைவுகள்

- இலகுவில் எயிட்ஸ் நோயுக்குள்ளாகும் தன்மை
- மலட்டுத் தன்மை / கருவளக் குறைவு
- கருப்பைக் குழாயில் கருத்தரித்தல்
- எடை குறைந்த குழந்தை பிறத்தல்
- கருச்சிதைவு
- சிசு இறந்து பிறத்தல்

## பாலியல் நோய்களுக்கான சிகிச்சை

- பாலியல் நோயறிகுறிகள் காணப்பட்டதும் ஆரம்பத்திலேயே வைத்தியரை நாடவும்
- நோயறிகுறி மறைந்தாலும் மீண்டும் கிளினிக் சென்று நோய் பூரணமாக குணமாகியதை உறுதிப்படுத்தல்
- நோய்தொற்றுடையவருடன் அவரது துணைவர் அல்லது துணைவியும் சிகிச்சை பெறுதல் அவசியம்

## பாலியல் மூலம் கடத்தப்படும் நோய்களுக்கான கிளினிக் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது எங்கே?

- அறை இலக்கம்.33இ யாழ் போதனாவைத்தியசாலை யாழ்ப்பாணம்.
- இங்கு நோயாளரின் தகவல்கள் இரகசியமாக பேணப்படுகிறது.


**LAVA DIAGNOSIS**

**Member of lava Holidings Pvt Ltd.75, Temple Road, Jaffna.**

- புற்று நோய்களைக் கண்டறியும் இரத்த பரிசோதனைகள்.
- தைரொயிட் (Thyroid) நோயைக் கண்டறியும் இரத்தப் பரிசோதனைகள்.
- Sacn, Ecg வசதிகள்.

***Sacn, Ecg** மற்றும் ஒவ்வொரு உடல் அங்கத்தினதும் செயற்பாட்டைக் கண்டறியும் தனித்துவமான இரத்தப் பரிசோதனைகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற.*

**BASIC BODY CHECK-UP** அடிப்படை உடற் பரிசோதனைகள்.




May 2011

Miss. A. Surawjya. Robert Anton - 2007/FM/40